சிங்கள வர்த்தகர் வவுனியாவில் அத்துமீறல்

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 85 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 11 இதழ் 130
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 25 — 06 — 1993

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் உள்ள தமிழ் மக்களுக்கென யாத்திரிகர் விடுதிப் பகுதியில் சிங்கள வர்த்தகர்கள் சிலர் அவசர அவசரமாக தற்காலிக கடைகளை அமைத்துவருவதாகக் கூறப்படுகின்றது.

இக்கடைகளை அமைப்பதற்கு பௌத்த குருமாரும், பொலிசாரும் பின்னணியில் செயல்படுவதினால் இக்கடைகளை அத்துமீறி அமைப்பவர்கள்மீது வவுனியா மாநகர சபை எதுவித நடவடிக்கை

(4-ம் பக்கம் பார்க்க)

புலிகளுக்கும் அரசுக்கும் இருதரப்பு லாபம் - பி. பி. ஸி.

(லண்டன்)

கடந்த 3 வருட காலமாக யாழ் மக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதார தடையை அரசு நீக்கியுள்ளது இரு தரப்பாருக்கும் லாபமே என பி. பி. ஸி. நேற்று தெரிவித்தது.

ஸ்ரீலங்கா அரசைப் பொறுத்தமட்டில் இந்நடவடிக்கை மூலம் அரசாங்கம் வெளிநாட்டு உதவிகளை பெறும் வாய்ப்பை மேலும் அதிகரித்துக் கொள்ளலாம். விடுதலைப் புலிகளை பொறுத்தமட்டில்

(4-ம் பக்கம் பார்க்க)

தடை நீக்கப்பட்ட பொருள்கள் கப்பல்களில் நிரப்பப்பட்டன

அடுத்த சில தினங்களில் யாழ். வந்து சேரும்

(கொழும்பு)

தடைநீக்கப்பட்ட பொருள்கள் யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்படுவதாற்காக நேற்றுமுதல் அவை கொழும்புத்துறை முகத்தில் வைத்து பல கப்பல்களில் நிரப்பப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. டீசல், மண்ணெண்ணெய், உரவகைகள் உட்பட மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கப்பல்களில் அவசர அவசரமாக ஏற்றப்பட்டன. அடுத்த சில நாட்களில் இந்தக் கப்பல்கள் தொடர்ச்சியாக பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (4-ம் பக்கம் பார்க்க)

★ வவுனியாவில்

ஒரேநாளில் சைக்கிள்கள் அனைத்தும் விற்பனை

(வவுனியா)

வவுனியா நகரிலுள்ள கடைகளில் நீண்டநாட்களாக தேங்கிக்கிடந்த சைக்கிள்கள் அனைத்தும் நேற்று விற்பனை செய்யப்பட்டுவிட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில் உள்ள சைக்

(4-ம் பக்கம் பார்க்க)

புலிகளுக்கு 'ஒக்ஸிஜன்' கொடுத்ததற்கு சமம் இராணுவ அதிகாரி

(கொழும்பு)

தடைசெய்த பொருட்களை வடபகுதிக்கு அனுப்புவதற்கு அரசு எடுத்த முடிவு புலிகளுக்கு ஒக்ஸிஜன் கொடுத்ததற்கு சமமாகும் என்று பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

பெற்றோல், சைக்கிள்களை வடபகுதிக்குள் அனுப்புவதற்கு அரசு விருப்பம் தெரிவித்ததினால் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரிப்பதுடன் போரினால் மயக்கமடைந்துள்ள விடுதலைப் புலிகளுக்கு அது ஒரு புதிய வேகத்தைக் கொடுத்து விடும்என இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்திருப்பதாக வெரித்தாஸ் வானொலி மேலும் தெரிவித்தது. (வி)

ஐ. நா. செயலரை கொலை செய்ய முயற்சி! ஆறு பேர் கைது

(லண்டன்)

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் டாக்டர் பூத்ரஸ் பூத்ரஸ் காலியை கொலை செய்வதற்காக திட்டம் தீட்டிய குற்றத்திற்காக முஸ்லிம் கோட்பாட்டாளர் ஆறு பேரை நியூயோர்க் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்த ஆறு தீவிரவாதிகளும் ஐ. நா. செயலர் உட்பட அமெரிக்க செனட்டர்கள் மற்றும் சட்ட வல்லுநர்கள் பலரையும் கொலை செய்வத

(4-ம் பக்கம் பார்க்க)

அராலித்துறை சம்பவத்துக்கு புலிகளின் கண்ணியே காரணம்

— சர்வதேச ஆணைக்குழு முடிவு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் வைக்கப்பட்ட கண்ணிவெடியே கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற அராலிக் குண்டு வெடிப்புக்கு காரணமாகும் என சர்வதேச ஆணைக்குழு நேற்று முன்தினம் வெளியிட்ட தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவ் அறிக்கை ஆணைக்குழுவின் தலைவரினால் ஜனாதிபதி டி. பி. வி ஜேதுங்கவிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மேஜர் ஜெனரல் டென்னிக் கொப்பேகடுவ மற்றும் ஒன்பது உயர் அதிகாரிகளின் உயிரைப் பலிகொண்டது தரைக்கண்ணியே. வாகனத்தின் கீழ்ப்பகுதியில் பொருத்தப்பட்ட வெடிகுண்டு அல்ல.

இக்கண்ணிவெடி விடுதலைப்

(4-ம் பக்கம் பார்க்க)

ஹேமா பங்குபற்றவில்லை

(கொழும்பு)

மிகிந்தலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கம்உதாவ வைபவத்தில் திருமதி ஹேமா பிரேமதாசா கலந்துகொள்ளவில்லை.

இந்த வைபவத்தில் கலந்து

(-4ம் பக்கம் பார்க்க)

மீண்டும் யுத்தம் ஏற்பட வழிவகுக்கும்?

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு அரசாங்கம் அனுப்ப முடிவு செய்துள்ளது மீண்டும் ஒரு யுத்தத்துக்கு வழி ஏற்படுத்தும் செயலாகும் என கொழும்பில் பலர் அச்சம் தெரிவித்துள்ளதாக பி. பி.ஸி. நேற்று தெரிவித்தது.

குண்டுகளை தயாரிப்பத

(4-ம் பக்கம் பார்க்க)

நெருக்கடிகால யாழ்-வன்னி தொடர்பு சேவை செயலகங்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வீதியில் 'ஈழநாடு' காரியாலயத்திற்கு அண்மையிலும் (முன்னைய காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கட்டடத்தில்) கிளிநொச்சியில் கரடிப்போக்கு சந்திக்கு அண்மையில் உள்ள கட்டடத்திலும் இயங்கிவந்த நெருக்கடி கால யாழ். வன்னி தொடர்புச் சேவை செயலகங்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

ஸ்ரான்லி வீதியில் (அருச்

(4-ம் பக்கம் பார்க்க)

ஐ.தே.க. பிளவுபடும் அறிகுறி?

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சிக்குள் பெரும் கருத்துவேறுபாடுகளும், பிளவும் ஏற்பட்டுள்ளது. இது இப்போது வெளிப்படையாகவே அரங்குக்கு வந்துவிட்டது.

நேற்று முன்தினம் மிகிந்தலையில் இடம்பெற்ற கம்உதாவ வைபவத்தில் ஐக்கியதேசியக் கட்சிக்குள் இருந்த பூசல் பூதாகரமாக வெடித்தது.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் கிறிசேன கூரே மேற்படி வைபவத்தில் பேசியபோது கம்உதாவ நிகழ்ச்சியை ஒரு கேளிக்கை நிகழ்ச்சி எனக் கூறி அரசு அதனை தடை செய்திருப்பதை வன்மையாகக் கண்டித்தார்.

கம் உதாவ ஒரு கேளிக்கை

(4ம் பக்கம் பார்க்க)

உடுகம்பொல வரவால் கட்சியில் அதிருப்தி

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாஸா உடுகம்பொல இலங்கை திரும்பி வந்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள முன்னாள் ஜனாதிபதி பிரேம

(4-ம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் சுரேகா புத்தக களஞ்சியம், 25, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (ஏ-3206)

பல்கலைக்கழக இரண்டாம் வருட அரசறிவியல் மாணவர்களுக்கு பொது ஆட்சி இயல் நூல் வெளிவந்துள்ளது. ரூ 80-00 கிடைக்குமிடம் ஸ்ரீ காந்தா புத்தகசாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். (கி-254)

புதிய வெளியீடு

பாடசாலை மேடைகளில் உங்கள் குழந்தைகள் பேச்சாளராக வேண்டாமா? பாலர் பிரிவிலிருந்து ஐந்தாம் ஆண்டு வரையான மாணவர்களுக்கு பேச்சுக்கள், கட்டுரைகளாகவும் உதவும். "என்னாலும் பேசமுடியும்" ஆசிரியர் "கோப்பாய் - சிவம்" (கி-253)

PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ-112)

O/L கணிதம்

Distinction பெறுபேறடைய மீட்டல். ஆரம்பத்திலிருந்து ஆண்டு 9, 10 உட்பட B. Sc (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (கி-261)

— பெயர் மாற்றம் —
யாழ்நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் G.V. Kanesalinkam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன் G.V. Kanesalinkam, 298, காங்கேசன்துறை வீதி, — யாழ்ப்பாணம். —

(சி 252)

பண்டிதமணி நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

பண்டிதமணி நினைவுப் பேருரை எதிர்வரும் 27-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கைலாசபதி அரங்கில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது. "மெய்கண்டாருக்கு முற்பட்ட சைவசித்தாந்தம்" என்னும் பொருளில் கலாநிதி சோ. கிருஷ்ணராசா நினைவுப் பேருரையை நிகழ்த்துவார்.

பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தினால் வழங்கப்பட்ட றவை, பயறு, மைசூர், சித்தாமணிக் கடலை, வெள்ளைப், பச்சை அரிசி என்பனவும் சுன்னாகம் பேரூ. சு. சங்க கிளைகள் மூலம் 21ம் தேதி முதல் கட்டுப்பாட்டு விலையில் விநியோகம் செய்யப்படுகிறது.

ஆயுர்வேத D. A. M. இறுதிப் பரீட்சை

கொழும்பில் ஆயுர்வேத திணைக்களத்தினால் நடாத்தப்படும் D. A. M. பரீட்சை ஆடி 16, 17, 18ந் திகதிகளில் எழுத்துப் பரீட்சையும் மிகுதி நாட்களில் வாய்முறைப் பரீட்சையும் நடைபெறும்.

மேற்படி பரீட்சை யாழ்ப்பாணத்தில் 1993ம் ஆண்டு முடியும் வரை நடைபெறமாட்டாது. ஆகவே 28-06-93 அன்று காலை 10 மணிக்கு கல்லூரியினால் பரீட்சைஎடுக்கும் சகல மாணவர்களையும் சமுகமளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

அதிபர்

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி

யாழ்ப்பாணம்.

(கி-260)

சுழிபுரம் — பறுளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானம்

இன்று [25-06-93]

தேர்த் திருவிழா

வருக! வருக!! வருகவே!!!

தமிழர் அபிலாசைகள் நிறைவேறிட.....

பழமைகள் பேணிப் பயின்றிட
புதுமைகள் பூத்துக் குலுங்கிட
பாரினில் புகழ் பரப்பிட
தமிழர் அபிலாசைகள் நிறைவேறிட
சுழிபுரம் பறுளையுறை நாயகனே
ஈசுரவிநாயகனே ஏறிடுவீர் ஏறிடுவீர்
சித்திரத் தேரினிலே சித்தியுடன்
ஏறிடுவீர்
ஏறிடுவீர் எம்மைக் காத்திடுவீர்

— சோழியூரான்

அன்பளிப்பு:-

சோழியபுரம் பத்ம வெளியீடு

(ஏ-258)

இன்று

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் - பறுளாய் ஈசுர விநாயகர் தேர்த் திருவிழா இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது. நாளை தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

0 0 0

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. (71)

0 0 0

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்தமெய்வல்லுனர்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கற்கோவளம் பொது விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது. (க)

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகம் சமூக விஞ்ஞான மன்றத்தின் ஆதரவில் இன்று கலாநிதி எஸ். கே. எஸ். நாதனின் "பொது ஆட்சி இயல்" நூல் வெளியீடு பிற்பகல் 1-00 மணிக்கு பொருளியல்துறை மண்டபத்தில் நடைபெறும்.

0 0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணியம் பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆலய ஆனிமாத பூரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு விசேட அபிஷோம் பூசை ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெறும். (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். திரு வெ இளங்குமரன் (தலைவர், தமிழீழ கல்விக் கழகம்) தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைப்பார். திரு. க. சேதிலிங்கம் (முகாமையாளர், ஹற்றன் தேசிய வங்கி, யாழ்ப்பாணம்) பிரதம விருந்தினராகவும், திரு. சி. வேலாயுதம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்) சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (162)

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

முதலாவது பிறந்த தின வாழ்த்து

25 - 06 - 1993



செல்வன் செந்தூரன்

கந்தர்மடம் பழம் வீதியைச் சேர்ந்த செல்வரெட்ணம் கருணாவதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் செந்திக்குமரன் (செந்தூரன்) தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (25 - 06 - 93) தனது இலத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்! இவரை அப்பா, அம்மா, அக்கா, அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அத்தைமார், மாமாமார், சித்திமார், பெரியமாமா (சவுதி), குட்டிமாமா (கொழும்பு), சூரிசித்தப்பா (பாம்கோப்), ரவி சித்தப்பா (இந்தியா), மனோகித்தப்பா, அண்ணாமார், அக்காமார் மற்றும், உற்றார், உறவினர்கள், ஸ்ரீ சித்திவிநாயகப்பெருமான் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

S. V. சூரிசித்தப்பா
(பாம் கோப்)

பழம் ரோட். கந்தர் மடம். (கி-257)

சுழிபுரம் பறுளாய் ஈசுர விநாயகா!

இன்று தேர்த் திருவிழா

தொண்டுகள் பல செய்திட அருள் தரும் விநாயகனே!

(கி-259)

ஆலயத் தொண்டர் சபை.

கிழக்கு படையினர் கட்டுப்பாட்டில் இல்லை எப்படி சர்வஜனவாக்கெடுப்பு நடத்துவது?

- சுதந்திரக்கட்சி செயலர் கேள்வி -

(கொழும்பு)

"வட கிழக்கு மாகாண சபைகளின் இணைப்பையோ அல்லது அங்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதையோ கிறி லங்கா சுதந்திரக்கட்சி கேட்கவில்லை. ஆனால் ஐ. தே. கட்சியால் ஏற்படுத்தப்பட்ட இந்தச் சிக்கலான பிரச்னைக்கு தீர்வொன்று காண்பதையே நாம் விரும்புகிறோம்".

இவ்வாறு கிறி லங்கா சுதந்திரக்கட்சி செயலாளரும், எம். பி.யுமான திரு. தர்மகிறி சென நாயக்கா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாது:

கிழக்கு மாகாணத்தில் வட-கிழக்கு இணைப்பு பற்றி சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது பற்றி தற்போது அதிகம் பேசப்படுகிறது தெரிவுக்குழுவும் அது பற்றி குறிப்பிட்டுள்ளது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் தற்போது தேர்தல் நடத்தக்கூடிய சூழ்நிலையும் இல்லை. சாத்தியமும் இல்லை. கிழக்கில் பாதுகாப்பு படையினரால் கைப்பற்றப்பட்ட பிரதேசத்தையே தக்க வைத்துக் கொள்ள முடியாமல் உள்ளது. அம்பாறை போன்ற சில இடங்களை மாத்திரம் கட்டுப்பாட்டில் அவர்கள் வைத்துள்ளனர். இப்படி நிலைமை இருக்கையில் சர்வஜனவாக்கெடுப்பு நடத்த உத்தேசிப்பது கேலிக்குரியதாகும்.

வட கிழக்கு பிரச்னைக்கு தேசிய மட்டத்திலான ஒரு இணக்கம் ஏற்படவேண்டும். இதற்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் ஸ்தாபனங்கள், அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து இதனை விவாதித்து தீர்வுகாணவேண்டும். சர்வஜன வாக்கெடுப்புக்கு சகல தமிழ்க்கட்சிகளும் சிங்கள, முஸ்லிம் கட்சிகளும் எதிர்க்கின்றன. நாடாளுமன்ற தெரிவுக்குழு கிழக்கில் சர்வஜனவாக்கெடுப்புஒன்றை நடத்த தீர்மானித்ததோ தெரியாது. ஆனால் திரும்பத்திரும்ப சர்வஜன வாக்கெடுப்பு பற்றி தெரிவுக்குழு பிரஸ்தாபிக்கக் கூடாது.

நாடுபூராவும் ஒன்றிணைந்து வட-கிழக்கு பிரச்னைக்கு தீர்வு காண முன்வருவதோடு, நாடாளுமன்ற தெரிவுக்குழுவும் விடாமுயற்சியோடு தொடர்ந்து நடவடிக்கையில் இறங்கி தீர்வுக்காணஎத்துறையையும் விடாமல் கைக்கொள்ள வேண்டியது இன்றைய தேவையாகும். (கே-கி)

விடுதலைபுலிகளுக்கு எதிரான நடவடிக்கை தொடரும்!

- ஜெயலலிதா அறிவிப்பு -

(சென்னை)

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

அ. தி. மு. க. அரசு பதவிக்கு வந்து இரண்டாண்டு காலம் நேற்று முடிவடைவதையடுத்து தமது அரசு பதவிக்கு வந்து செய்த சாதனைகள் பற்றிச் செய்தியாளரிடையே பேசும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

பொலிஸ் திணைக்களத்துக்கு நவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டு நவீனமயப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை பங்குத் தந்தை தரகர் ஹர்ஸத் மேத்தா குறிப்பிட்ட குற்றச்சாட்டை மறுப்பதாயின் பிரதமர் நரசிம்மராவ் அதை நிரூபித்துக் காட்டவேண்டும் என்டு குறிப்பிட்டுள்ளார். (கே-கி)

புத்தளம் சிமெந்து தொழிற்சாலை தனியாருக்கு விற்பனை?

(கொழும்பு)

புத்தளம் சீமெந்து தொழிற்சாலையை தனியாரிடம் விற்பதற்கு அரசாங்கம் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதென்று தெரிவிக்கப்படுகின்றது.

இத்தொழிற்சாலையை அரசாங்க சார்புள்ள ஒருவருக்கு விற்க அரசு முயற்சி செய்வதால் 1993-ம ஆண்டு மே 14-ம் திகதியிலிருந்து இதனை விற்பதற்கான கேள்விக் கோரிக்கைத் திகதியை நீடித்துள்ளார்களாம்.

தனியாரிடம்சிமெந்துதொழிற்சாலையை விற்பதினால் சீமெந்தின் விலை சந்தையில் உயரக்கூடும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (சு-கி)

கல்வி ஆராய்ச்சி நிறுவனம் சீல் வைத்து மூடப்பட்டது

(கொழும்பு)

டாக்டர் கிறிஸ் பொன்னம் பெருமாவின் கீழ் இயங்கிக் கொண்டிருந்த ஜனாதிபதி கல்வி ஆராய்ச்சி ஸ்தாபனம் 'சீல்' வைத்து மூடப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சி நிறுவனம் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவினால் தொடக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (சு-கி)

இராணுவ வாகன அணி முகாம் நோக்கி நகர்வு

(தாளையடி)

கட்டைக்காடு- வெற்றிலைக்கேணி இராணுவ முகாமில் இருந்து மண்டலாய், மாவிலங்கைத் தோட்டம் ஊடாக இயக்கச்சி, ஆனையிறவு முகாம்களை நோக்கி இராணுவ வாகன அணி ஒன்று கடந்த மூன்று நாட்களாக வாலை வேலைகளில் செல்வதை வாகன ஓசைகளின் மூலம் அறியக்கூடியதாயிருக்கிறது.

இவ்வணி மாலை நேரம் கட்டைக்காடு- வெற்றிலைக்கேணி முகாமுக்கு மீண்டும் திரும்பி வருவதையும் அவதானிக்கக் கூடியதாகவிருக்கிறது (163-கி)

விளையாட்டுபோட்டி

(யாழ்ப்பாணம்)

அறவழி மழலைகள் கல்விப் பூங்கா பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி அண்மையில் கைதடி நுணாவிலில் நடைபெற்றது

பாடசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் திருமதி எஸ். செல்வராணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேசசெயலாளர் திரு.பி. சுந்தரம்பிள்ளையும், அதிபர் க. இளையதம்பி பிரதமவிருந்தினராகவும் கலந்து கொண்டனர். (கி)

சித்திரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபை நுண்கலை மன்றத்தினரால் நடாத்தப்படவுள்ள சித்திரப் போட்டியில் பங்குபற்ற விண்ணப்பித்த சகலரும் போட்டி நடைபெறும் தினமான நாளை சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு மருதனார் மடத்தில் அமைந்துள்ள யூனியன் கல்லூரியில் சமுகமாயிருக்கும்படி கேட்கப்படுகிறார்கள்.

வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாநில சுருட்டு தயாரிப்பாளர் சங்கத்தின் 11 வது ஆண்டு பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் நிர்வாக சபை தலைவராக திரு கி. சச்சிதானந்தசிவமும் செயலாளராக திரு. த. குணரட்ணமும் பொருளாளராக திரு. இ. மகேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இராசி பலன்

25-06-1993

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு ஆனி 11)

ஷஷ்டி மு. இ. 9-25 வரை, பூரம் பி. இ. 4-36 வரை, இராகுகாலம் காலை 10-25 முதல் 11-55 வரை, சுபநேரம் காலை 5-55 முதல் 7-25 வரை, குமார ஷஷ்டி விரதம், இரவு நடேசர் அபிஷேகம்.

மேடம்: அமைதியற்றமனது சபல குணம், தொழில் அலைச்சல்.

இடபம்: ஆசையால் ஏமாற்றம், உறவினர் பகை, அதிக செலவு.

மிதுனம்: பிரபலஸ்தர் ஆதரவு, தொழில் லாபம், பாராட்டு.

கடகம்: பேச்சினால் அவமதிப்பு, தொழில் தடை, காரிய நஷ்டம்.

சிங்கம்: அதிகாரிகளுடன் சுமுகஉறவு, அதிஷ்டம், கடன் வசூல்

கன்னி: தொழிற்சுறுசுறுப்பு

4-ம் பக்கம் பார்க்க)

சிறைச்சாலை காலி

(கொழும்பு)

தென்பகுதியில் தமிழ் மொழி படும்பாடு பெரும் பாடாகி விட்டது. தமிழ் மொழி பெயர்ப்புகளில் ஏற்படும் தவறுகளை தமிழை ஆர்வத்தோடு கற்று வரும் சிங்கள மக்கள் பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

காலி மாவட்டத்திலுள்ள சிறைச்சாலையில் 'காலிச் சிறைச்சாலை' என எழுதுவதற்கு பதிலாக பெரிய எழுத்துக்களில் 'சிறைச்சாலை காலி' என்று எழுதப்பட்டுள்ளதாம்.

இவ்வாறே பல திணைக்களங்களிலும் தமிழ் எழுத்துக்கள் தவறாக எழுதப்பட்டுள்ளதாம். (சி)

விவசாய தேவைகளுக்கு ம. எண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் விவசாயத் தேவைகளுக்கு விநியோகம் செய்வதற்காக யாழ். செயலக உற்பத்திப் பிரிவினால் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் மண்ணெண்ணை பரல்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பிரதேச செயலகத்தினதும் ஆட்புலத்துக்குட்பட்ட விவசாயிகள் மேற்கொள்ளுகின்ற பயிர்களுக்கு ஏற்றவகையில் அவ்வப் பிரதேச விவசாயக் குழுவின் ஒத்துழைப்புடன் முன்னுரிமைப் படுத்தி வழங்கும்படியும் அவ்வப் பிரதேசத்தின் போதனாசிரியர்களின் விதப்புரையைக் கவனத்தில் கொண்டு விவசாயிகளுக்கு எண்ணை விநியோகிப்பதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும்படியும் விவசாயத் தேவைகள் தவிர்ந்த வேறு எந்த நோக்கத்திற்காகவும் ம. எண்ணை வழங்கவேண்டாமென்றும் பிரதேச செயலர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள். (161-கி)

பிரேமா மருமகன் வெளிநாட்டுக்கு 6மாத காலத்துள் 80 தடவை பயணம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா காலத்தில் 6மாத காலத்துக்குள் அவரது மருமகன் கியூபட் ஜெயக்கொடி 80 தடவை வெளிநாடுசென்று திரும்பியுள்ளாரென்று தெரிவிக்கப்படுகிறது.

இவரது பயணங்கள் ஏயர் லங்காவில் இலவசப்பயணங்களாக இருந்தபடியால், ஏயர் லங்காவுக்கு பல லக்ஷ்ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதென்றும் கூறப்படுகிறது

அவ்வேளை இவர் ஏயர் லங்காவின் பணிப்பாளர் சபை உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சு-கி)

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

ஆனி உத்தர திருவிழா 1993

நாளை (26.6.93)சனிக்கிழமை அதிகாலை 4-00மணிக்கு ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு ஸ்நபன அபிஷேகமும் பஞ்சமுக அர்ச்சனையும் தொடந்து ஆருத்திரா தரிசனத்துடன் தெருவீதி உலாவருதல்

மங்கள இசை வழங்குபவர்கள்

நாதஸ்வரம்: கோண்டாவில் நாதஸ்வர மேதை வி. கே. கானமூர்த்தியின் புதல்வன் கிருஷ்ணதாசன்

இணுவையூர் நாதஸ்வர மேதை கே. ஆர். சுந்தரமூர்த்தியின் புதல்வன் தேவதாசன்

தவில்: ஆர். ஜீவா" எம். ஜெயா

விழா உபயகாரர்
கந்தையா உதயகுமார்.
தில்லையம்பதி, 25-6-93.

இங்ஙனம்
பரிபாலனசபை.
(கி 255)

யாழ்ப்பாணத்தில் பிறந்ததால் அரச நியமனம் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் பிறந்த காரணத்திற்காக மன்னாரைச் சேர்ந்த இருவருக்கு அரச நியமனம் வழங்க அரச அதிகாரிகள் மறுத்துவிட்டனராம்.

இவ் இருவரும் அரசினால் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்தும் கூட அரச நியமனம் இவர்களுக்கு வழங்கப்படவில்லையாம்.

இதனால் இவ் இருவரும் விரக்தி நிலைக்குத்தள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது (ஈ)

சகல போராளி குழுக்களும் தமிழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டன - ஜெயலலிதா

(சென்னை)

தமிழகத்தில் தமது அரசு பதவியேற்றபின் விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து இலங்கைத் தமிழ்ப் போராளி அமைப்புக்களையும் வெளியேற்றிவிட்டதாக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா உறுதிபட தெரிவித்துள்ளார்.

சென்னையில் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் மத்தியில் நேற்று உரையாற்றுகையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்—

தீவிரவாதிகளின் ஊடுருவலை தொடர்ந்து தடுக்க வேண்டுமாயின் கடலோரப் பகுதிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படவேண்டும்.

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதி முகாம்கள் மீது கண்காணிப்பு செலுத்தப்படவேண்டும் என்றார். —ஈ

பரீட்சார்த்திகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்கு மாகாண சபையால் கோரப்பட்ட கூட்டுறவுப் பரிசோதகர் வேலைக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் தங்கள் பரீட்சைக்கட்டணத்தை வைப்பு 6-25 என்ற தலைப்பின் கீழ் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையின் அரசாங்க அதிபர் யாழ். மாவட்டம் என்ற பெயருக்கு செலுத்துமாறு கேட்கப்படுகின்றார்கள்.

இப்பணத்தை பற்று வைப்பதற்கான பத்திரத்தை செயலகத்திலோ அல்லது வங்கியிலோ பெற்றுக்கொள்ளலாம் என யாழ். செயலகம் அறிவித்துள்ளது. (6 2)

அராலித்துறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் பயன்படுத்தும் தரைக் கண்ணிவகையை சேர்ந்தது. குண்டுவெடிப்பு இடம்பெற்ற இடத்தில் இத்தரைக்கண்ணி புதைக்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட தரைக்கண்ணி வெடி விடுதலைப்புலிகளினால் ஊர்காவற்றுறையிலிருந்து வெளியேறும்போது புதைக்கப்பட்டு இராணுவத்தினரால் கண்டுபிடிக்க முடியாத ஒன்றாகவுமிருக்கலாம்.

அல்லது விடுதலைப் புலிகள் அப்பகுதியிலிருந்து வாபஸ் பெற்றபின் மீண்டும் ஊர்காவற்றுறைக்குள் ஊடுருவி மேற்படி கண்ணிவெடியை புதைத்துவிட்டுச் சென்றிருக்கலாம்.

எனினும் விடுதலைப் புலிகளின் எவ அங்கத்தவர்கள் இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்பதனைக்கூற முடியாதுள்ளது.

இச்சம்பவத்திற்கு பொறுப்பானவர்களுக்கு விடுதலைப் புலிகள் தலைவர் பரிசு வழங்கியதாக பத்திரிகை ஒன்றில் செய்தி வெளிவந்துள்ளது.

ஆனால் இது ஓர் பிரச்சார தந்திரமாகவும் இருக்கக்கூடும். எனவே இதில் சம்பந்தப்பட்டவர்களின் அடையாளத்தை ஏற்றுக்கொள்வது குறித்து ஆணைக்குழு எச்சரிக்கையுடன் நடந்து கொண்டுள்ளது.

குறிப்பிட்ட வாகனத்தின் பின் சக்கரம் தரைக் கண்ணியின் மேலாக சென்றபோது அது வெடித்ததாகவும் இது சிரேஷ்ட அரசபகுப்பாய்வாளரின் சாட்சியத்துடன் ஒத்துப் போவதாகவும் உள்ளது.

முடிவாக இக்குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கு விடுதலைப் புலிகளே முழுப்பொறுப்பு என்பது ஆணைக்குழுவின் உறுதியான முடிவு எனத்தெரிவித்துள்ளது.

மேற்படி ஆணைக்குழு தனது விசாரணைகளை நடத்த மே மாதம் 26-ம் திகதி ஆரம்பித்தது. ஜூன் 12ம் திகதி இவ் ஆணைக்குழு லண்டன் சென்றது.

திருமதி லலி கொப்பேகடுவவின் கோரிக்கையின் பேரில் இந்த சர்வதேச ஆணைக்குழுவின் விசாரணை நடாத்தப்பட்டது தெரிந்ததே. (ஈ)

மீண்டும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ற்கு தேவையான பொருட்களான எரிபொருள், உரவகைகள், போன்றவற்றை புலிகள் அரசிடம் கேட்டிருப்பது கவனத்தில் எடுக்கப்படவேண்டும்.

இது மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதற்கு வழிவகுப்பதாகவே தோன்றுகிறது என தென்பகுதி மக்கள் மேலும் அச்சம் தெரிவித்துள்ளனர். (இ)

நெருக்கடிகால

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுறு வீதி) ஆங்யர்குளம் சந்திக்கு அண்மையிலும், கிளிநொச்சியில் பெற்றோலியக்கூட்டுத்தாபனத்திற்கு அண்மையில் உள்ள கட்டிடத்திலும் இத்தச் செயலகங்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

மேலும் தகவல் கையேற்கும் கருமபீடம் ஓமந்தை சோதனை நிலையத்திலும் இயங்கிவருகின்றது என்பதை போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

இராசி பலன்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பகஷ்டம், மனவேதனை.

துலாம்: பெரியோர் ஆசி, குடும்பசுகம், அதிகவருமானம்.

விருச்சிகம்: பண ஆசை, பண அனுகூலம், தியாகம்.

தனுசு: வருமானத் தடை, சகாக்களின் துயர், நம்பிக்கையின்மை.

மகரம்: இடையூறு, எதிர்பார்ப்புக்கள் தோல்வி, பணமுடை.

கும்பம்: பதவி மாற்றம், விவேகிகள் நட்பு, பணவரவு.

மீனம்: உயர் கௌரவம், மனநிம்மதி, புதிய உபாயம்.

ஜோஸ்யர்

மனிதஉரிமைமீறல்விதப்புரை நடைமுறைப்படுத்த பின்னடிப்பு

அரசு மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறிலங்கா அரசு ஏற்றுக்கொண்டுள்ள மனித உரிமை மீறல் சம்பந்தமான விதப்புரைகள் இதுவரையும் நடைமுறைப்படுத்தவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கைது செய்யப்படுதல், ஆட்கடத்தல், சித்திரவதை செய்யப்படுதல் ஆகியவற்றிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க அரசு நடைமுறை ரீதியிலான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா அரச படையினர் சுற்றிவளைப்பு தேடுதல் நடத்தி ஆட்களைக் கைது செய்த பின்னர் அவர்கள் கைதானதற்கான உறுதிப்பத்திரங்கள் வழங்குவதில்லை அத்துடன் கைதிகள் இரகசியமாக தடுத்துவைக்கப்படுவதுடன் இவர்கள் பற்றிய விபரங்களை சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் தெரிவிக்காமல் மறைத்து விடுகின்றனர்.

தடுத்து வைக்கப்பட்டவர்கள் மீது வழக்கு தொடர்வது விடயத்திலும் அரச அமைப்புகள் வித்தியாச முறையில் செயல்படுகின்றன. இவற்றின் விளைவாக எடுக்கப்படும் முடிவுகளும் வித்தியாசமாவையாக அமைந்து விடுகின்றன இதனால் தாம் எங்கு நிற்கிறோம் என்று வழக்கு தொடுக்கப்பட்ட கைதிகளுக்கு தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தாம்விடுதலையாகி வெளியே வந்தாலும் தாம் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படலாம் என்று அவர்கள் அஞ்சுகின்றனர்.

எனவே தடுத்து வைக்கப்பட்டிருப்போர் பலர் குறித்து தெளிவான முடிவு எடுக்கப்பட்டிருக்கவில்லை என தோன்றுகிறது. (வே)

தடைநீக்கப்பட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை யாழ்ப்பாணம் கொண்டுசெல்வதற்கு தடை செய்யப்பட்டிருந்த உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிக்கொண்டு குமண கப்பல் நேற்றுபருத்தித்துறை நோக்கி புறப்பட்டதாக அரசு அறிவித்தது.

இந்தக் கப்பல் இன்று வெள்ளிக்கிழமை புறப்படுவதற்கு ஆயத்தமாக இருந்தபோதும் அது நேற்றைதினமே புறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தக்கப்பலில் எரிபொருள், எண்ணெய் மற்றும் உரவகைகளுங் கொண்டுவரப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதில் 1500 பீப்பா மண்ணெண்ணெ, 500 பீப்பா டீசல், 100 பீப்பா என்ஜின் ஒயில், 50 மெட்ரிக் தொன் யூரியா உரம், மற்றும் 200 பீப்பா தேங்காய் எண்ணெய் போன்றவை இந்தக்கப்பலில் இங்கு அனுப்பப்பட்டுள்ளதாக மேலும் அறிவிக்கப்பட்டது. (வி)

உடுகம்பொல

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாஸா ஆதரவாளர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது

அரசு திரு உடுகம் பொலவுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கும் விதத்தில் அவருடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டதும், அவருக்கு மீண்டும் பொலிஸ் பதவிவழங்கப்படலாம் என பரவலாக பேசப்பட்டு வருவதும் பிரேமதாஸா ஆதரவாளர்களை பெரும் ஆத்திரமடையச் செய்துள்ளதாம்.

திரு. உடுகம் பொலவின் வரவு அமைச்சர் சிறிசேன கூரேயை வெகுவாகப்பாதித்துள்ளது என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர். (இ)

ஐ. தே. க வுக்குள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சி என்றும் இராணுவமும் ஒரு கேளிக்கைதான் என வெளிப்படையாகவே கூறிவிட்டார்.

இதேவேளையில் ஐக்கிய தேசியக் கட்சியின் உதவி பொதுச் செயலாளர் பதவிக்கு திரு. சுசில் முனசிங்க நியமிக்கப்பட்டிருப்பது பொதுச்செயலாளர் பதவியை வகிக்கும் சிறிசேன கூரேயின் அதிகாரத்தை குறைப்பதற்காகவே என கட்சிக்குள் ஒரு பிரிவினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

திரு. சிறிசேன கூரே விரைவில் வெளிநாடு ஒன்றுக்கு புறப்படவிருப்பதும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள கருத்துவேற்றுமைகளையும், பிளவையும் எடுத்துக் காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். —இ

5080 குடும்பங்கள் வவுனியாவில் மீளக் குடியமர்வு

(வவுனியா)

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வவுனியாப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த 5080 குடும்பங்கள் மீண்டும் அங்கு குடியமர்த்தப்படவுள்ளன.

மீளக் குடியமர்த்தப்படும் குடும்பங்களின் புனர்வாழ்வுக்காக வங்கிக்கடன் உதவிகள் வழங்கப்படுவதுடன் 6 மாத காலத்துக்கு இலவச உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படவிருப்பதாக அரசுநேற்று அறிவித்தது. —வி

பிரேமா ஆட்சிக்காலத்தில் வடக்கு-கிழக்கில் பலர் பலியாகினர்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் ஆயிரக்கணக்கானோர் இறந்துள்ளார்கள் என்று "த எகொனமிஸ்ட் ஒவ் லண்டா" என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

பிரேமதாசா தனது ஆட்சிக் காலத்தில் நல்லவற்றை செய்தாலும் பெரும் தீங்குகளும் இழைத்துள்ளார்.

இலங்கையில் உள்ள ஒரு கோடி 70 லட்சம் மக்களில் ஐந்து லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் வெளிநாடுகளில் அகதிகளாக உள்ளனர் எனவும் அந்தப் பத்திரிகை மேலும்தெரிவித்துள்ளது. (சு)

இரு புதிய அமைச்சர்கள் நியமனம்

(கொழும்பு)

இரு புதிய அமைச்சர்களை ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா நேற்று நியமித்தார்.

சுற்றுலா அமைச்சராக பி. எம். பி. சிறிலும், அரசியல் யாப்பு அரசியல் அலுவல்களுக்கான ராஜாங்க அமைச்சராக ரி. பி. நரேந்திரநாத் டுணுவலவும் நியமிக்கப்பட்டனர். —ஷ

ஐ. நா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ற்கு திட்டம் தீட்டியதுடன், அமெரிக்க புலனாய்வுப் பிரிவு தலைமைச் செயலகம் உட்பட மற்றும் பிரதான சுரங்கப் பாதைகளையும் குண்டுவைத்து தகர்க்கப்போவதாகவும் அச்சுறுத்தல் விடுத்திருந்தனர் என பொலிசார் தெரிவித்தனர். (வி)

வவுனியாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கில் வர்த்தகர்கள் புதிய சைக்கிள்களை பெருமளவில் கொள்வனவு செய்வதற்காக கொழும்புக்கு கொள்வனவுக்கட்டளை அனுப்பியுள்ளதாக கூறப்படுகிறது.

நேற்று முற்பகலுக்கு முன்பாகவே வவுனியாப் பகுதிகளில் உள்ள கடைகள் அனைத்திலுமுள்ள புதிய சைக்கிள்கள் அனைத்தும் விற்பனை செய்யப்பட்டதுடன், இக்கடைகளிலிருந்த சைக்கிள் உதிரிப்பாகங்களும், ரயர்-ரியூப்புகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (வி)

சிங்கள

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களும் எடுக்காது மௌனம் சாதித்துவருவதாகவும் கூறப்படுகின்றது.

வவுனியா பகுதிக்கு வெளியே உள்ள சிங்கள வர்த்தகர்களே இந்த அத்துமீறல் நடவடிக்கையை அங்கு மேற்கொண்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. வி—

ஹேமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளுமாறு அவருக்கு அனுப்பப்பட்ட அழைப்பிதழை அவர் நிராகரித்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியுள் அதிகாரப்போட்டி பூதாகரமாக உருவெடுத்துள்ளதையே இது எடுத்துக்காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ)

புலிகளுக்கும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களின் கஷ்டங்களை குறைக்கும் ஒரு வாய்ப்பாக இதனை நன்கு பயன் படுத்திக் கொள்ளமுடியும் என்று பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. -ஈ

ஒய்வூதியக் கோவை

(மானிப்பாய்)

விதவைகள், அனாதைகள் ஓய்தியம் பெறுவதற்கு யாழ். மாவட்டத்திலிருந்து கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு விண்ணப்பித்தவர்களின் 56 பேரின் ஓய்வூதியக் கோவைகள் யாழ். செயலகத்திலுள்ள ஓய்வூதியக் கணிப்புப் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (71)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூன் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Pojs office, Sri Lanka under Licence Number B/10336/B